REGD. No. M. 6311

PHONE No. [illegible]

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 107

# நம் நாடு

தி.மு.க். தினஇதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

THE NAM NADU A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF THE D.M.K.

சந்தா விகிதம் :
1 வருடம் ரூ 24—0—0
6 மாதம் ரூ 12—0—0
3 மாதம் ரூ 6—0—0
முன்பணம் [illegible]

சென்னை : புரட்டாசி 30௳ வெள்ளி (16—10—53) ★ ★ ★ வெளியூர் : ஐப்பசி 1௳ சனி (17—10—53)

# காங்கிரசின் மதிப்பு நீராவியாகிறது!

## "கோஷ்டிச் சண்டை பாதாளம் வரையில் பாய்ந்து இருக்கிறது"

## "பொருளாதார, சமுதாய விடுதலை அறப்போர் வாயிலில் நிற்கிறது"

### அரசியல் சட்டத்துக்கு முரணாக அவைத் தலைவரை அலட்சியப்படுத்தும் முதல் அமைச்சர்

### பஞ்சாப் காங்கிரஸ் சர்க்கார் மீது கட்டறுந்த காங்கிரஸ் சட்டசபை மெம்பர் குற்றப் பட்டியல்

**10,000 சொற்களால் ஆன பஞ்சாப் காங்கிரஸ் சர்க்கார் ஊழல் விமர்சனம்**

காங்திநகர், அக். 15—

முன்னாள் பஞ்சாப் காங்கிரஸ் சர்க்காரில் ஒரு அமைச்சராக இருந்தவரும், இப்பொழுது கட்டறுந்த காங்கிரஸ் சட்டசபை கட்சியினராக உள்ளவருமான ஸ்ரீராம் சர்மா என்பவர் 10,000 சொற்களால், காங்கிரஸ் கட்சியினுடையவும், சர்க்காரினுடையவும் நிர்வாக ஊழலை விமர்சனம் செய்திருக்கிறார்.

காங்கிரசையும், சர்க்காரையும், உள்ளிருந்தும் வெளியில் இருந்தும் பரிசுத்தப் படுத்துவதே எனது வாழ்க்கையின் லட்சியம் இந்த உயர்ந்த நோக்கத்திற்காகக் கொடுக்கப்படும் விலை, எதுவாக இருந்தாலும் அதைப் பெரிதென நான் கொள்ளவில்லை. வெகு வேகமாகத் தரத்திலும், அளவிலும் கீழ் நோக்கிக் கொண்டு இருக்கும் நிர்வாக ஊழல், அதிர்ச்சி அளிக்கப்படக் கூடியதாகும்"

"கோஷ்டிச் சண்டை பாதாளம் வரையில் பாய்ந்துவிட்டு இருக்கிறது. காங்கிரசின் மதிப்பும் விரைவாக நீராவியாகிக் கொண்டு இருக்கிறது."

"எந்த நாணயமானப் பொது ஊழியனும், இந்த ஊழல் நாடகத்தைப் பார்த்துக்கொண்டு சலனமற்று இருக்கமாட்டான். வேதனைப்படுகின்ற உயிரின் எதிரொலியை திணறடிக்கச் செய்ய பயனற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன"

அமைதியும், முன்னேற்றமும்தான் அவர்கள் விழையும் பேறு என்பதானால், ஊழியனுக்குப் பொறுப்பாயுள்ளவர்கள் தங்கள் போக்கைத் திருத்திக் கொள்ளட்டும்.

"பொருளாதார, சமுதாய விடுதலைக்கான மற்றொரு அறப் போராட்டம், நமது தெருக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கின்றதை நான் உணருகிறேன்."

"1929-ல் பாபுவின் இணையற்ற சத்தியாக்கிரகப் படையில் புனிதப் போர் வீரனாக சேர்ந்தேனே, அதே ஆர்வத்தில் பாரதமாதாவின் பலி பீடத்தில் என்னை பலியிட மறுமுறையும் உறுதி கொண்டுள்ளேன்."

"மாநில சர்க்காரின் உள்ளுக்குள் நடக்கும் திருவிளையாடல்களை, சட்டசபையில் ஒழுங்கு படுத்திக் கூறுவதை நான் ஒரு இன்பந் தரும் செயலாகக் கொள்ளவில்லை. கடமை உணர்ச்சியின் வற்புறுத்தினாலேயே நான் இந்தச் செயலை செய்கிறேன். என்னை மந்திரி சபையில் இருந்து திடீரென்று விலக்கினதற்கான காரணத்தை இன்னும் என்னால் அறிய முடியவில்லை."

நடைமுறை விதிகளுக்குப் புறம்பாக முதல் மந்திரி அரசியல் மரபுக்கு முரண்பாடாக நடந்துள்ள பல சம்பவங்களை,

(2-ம் பக்கம் பார்க்க)

### மதத் தலைவர்கள் போர்டு மறைகிறது

கராச்சி, அக். 15—

புது அரசியல் சட்டத்தின்படி, மதத் தலைவர்கள் போர்டு ஏற்படுத்துவதை ரத்துசெய்ய, பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை முஸ்லீம் லீக் கட்சி இன்று முடிவு செய்தது.

முஸ்லீம் மத சம்பந்தமான சட்டத் தகராறுகளை சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புக்கே விட வேண்டுமென ஏகமனதாகமுடிவு செய்யப்பட்டது.

"இஸ்லாம், பாகிஸ்தான் அரசாங்கத்தின் மதமாக இருக்கும்" என்ற ஷரத்தை நீக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## தியாகம், ஒழுக்கம் யாவும் பழங்கதையாகிவிட்டன!

## ஒரு போராட்டம் முடிந்தது: முக்கிய போராட்டம் பாக்கி இருக்கிறது!

### பொருளாதாரச் சுதந்திரம்தான் இன்றியமையாதது

**அதைப்பெற அதிகார மோகம் கூடாது—ஆனால் சேவா உள்ளம் தேவை**

ராஜமகேந்திரபுரம், அக். 15—

"பொருளாதார சுதந்திரமே அரசியல் சுதந்திரத்தைவிட மிக முக்கியமானது. இதற்கான போராட்டம் முடிவுறவில்லை".

"சுதந்திரப் போராட்டக் காலத்தில், சகிப்புத் தன்மை, தியாகம், உயர்ந்த பண்பு ஆகியன முன்னணியில் இருந்தன. இப்பொழுது இவ்வளவும் பின்னணிக்குப்போய் விட்டதற்கு மிகவும் வருந்துகிறேன்."

"பொருளாதார சுதந்திரத்தையும், சமுதாய சமத்துவத்தையும் அடைவதற்கான போராட்டத்தை நாம் நடத்த வேண்டியவர்களாக இருக்கிறோம் இதற்காக வறுமை, பசி, வேலையின்மை, சமூக உயர்வு தாழ்வு ஆகியவைகளை எதிர்த்து நாம் போராட வேண்டி இருக்கிறது."

"இந்தப் போராட்டத்திற்கு, பொதுமக்கள் நலம் என்ற நல்லுணர்வை மக்கள் பெற வேண்டுமேயல்லாது, அதிகார மோகத்திற்கு பலியாகிவிடக்கூடாது."

இங்குள்ள 'காந்தி குமாரம்' என்ற சங்கத்தின் சார்பில் பேசியபோது இந்தியக் குடியரசுத் தலைவர் எஸ். ராதாகிருஷ்ணன் மேற்குறித்தவாறு குறிப்பிட்டார்.

"ஆந்திர மக்கள், ஆந்திர மாநிலத்தின் வளம் கருதி, சமூகப் பொருளாதார சமத்துவத்திற்கு வகுப்பு வேற்றுமைகளை மறந்து உழைக்க வேண்டு" மென்றும் கேட்டுக் கொண்டார்.

### மதுரை தி. மு. கழகப் பொருளாளர் கிருஷ்ணசாமி கவலைக்கிடம்

(டிரங்க் செய்தி)

மதுரை, அக். 16

காங்கிரஸ் களபதிகளால் கடைபுகுந்து தாக்கப்பட்ட மதுரை மாவட்ட தி. மு. கழகப் பொருளாளர் தோழர் எஸ். கிருஷ்ணசாமி, அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார் என்பது அனைவரும் அறிந்ததே.

அவருக்கு ஏற்பட்ட புண்கள் ஆறிவந்தாலும், ஏராளமான இரத்தம் வெளியாகிவிட்டதால் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும், ஆனால், உயிருக்கு ஆபத்தில்லையென்றும் டாக்டர் கூறியிருக்கிறார்.

பம்பாய், அக். 16—

பிரயாணி பெட்டிகளும், கட்டில்களும் [illegible] புறப்பட்டிருந்த புகைவண்டி, நேற்றிரவு சுமார் 8-30 மணிக்கு, மேற்கு பிராந்திய ரயில்வேயில், மெகசாணா மாவட்டத்திலுள்ள இரு நிலையங்களிடையே தடம் புரண்டதில் இருவர் மாண்டனர்; நால்வருக்குக் காயம்; அவர்களில் ஒருவர் கவலைக்கிடமான நிலையிலுள்ளார்.

## சென்னை மாநில நலன்களில் இந்திய சர்க்கார் அலட்சியம்

### நீர் தேக்க திட்டங்கள் வட நாட்டில் அபரிமிதம்!

**வட ஆற்காடு பார்லிமெண்டு மெம்பரின் முறையீடு**

வேலூர், அக். 15—

"சென்னை மாநிலம் கவனிக்க உரிமைகொண்டுள்ள அளவிற்கு இந்திய யூனியன் சர்க்காரால் கவனிக்கப்படுவதில்லை நீர்தேக்க திட்டங்கள் பல வடநாட்டில் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் அளவிற்கு சென்னை மாநிலத்தில் மேற்கொள்ளப் படவில்லை."

இரண்டு நாட்களுக்கு முன்பு, இங்கு தபால் ஊழியர்கள் சங்கத்தில் பேசிய பார்லிமெண்டு உறுப்பினர் தோழர் வி. முனுசாமி அவர்கள், தபால் ஊழியர்களின் குறைகளை விவரித்துக் கூறி, பரிகாரம் தேவை என்று வற்புறுத்தியிட்டு, சென்னை மாநிலத்திற்கும், இந்திய யூனியனுக்கும் உள்ள தொடர்பு குறித்து கூறும் பொழுது மேலே எடுத்துக்காட்டியுள்ளபடி குறிப்பிட்டார்.

### ஐக்கிய மகாராஷ்டிரத்திற்கு கம்யூனிஸ்டு ஆதரவு

நாசிக், அக். 15—

நாசிக் ஜில்லா கம்யூனிஸ்டு கட்சி, கிபாடு தாலுகாவிலுள்ள சங்கோரியில், மூன்று நாட்கள் நடத்திய கூட்டத்தில், ஐக்கிய மகாராஷ்டிரக் கோரிக்கையை ஆதரிப்பதென முடிவு செய்துள்ளது. ஆந்திர அரசு அமைப்பையும் அது வரவேற்றுள்ளது.

**சந்தர்ப்பம் சாதகமாகுமா?**

லண்டன், அக் 15—

டிருபண்டி [illegible] புலனுக்கு கொண்டு, மேற்கு [illegible] ஏற்படுத்தவும், [illegible] செய்யவும் [illegible] ஆரம்பித்துள்ளனராம்!

**ஜவர் சிறையில்!**
**இன்று**
**46-வது நாள்**

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை
சென்னை : 16—10—1953 வெள்ளி

# அபாய அறிகுறி!

இந்தியத் துணைக்கண்டத்துக்கு விடுதலை கிடைத்து ஆறு ஆண்டுகள் ஆகின்றன. மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும், வாழ்க்கை வசதிகளுக்கும் அன்றே அமாவாசை இருள் சூழத் தொடங்கிவிட்டது என்பது மிகையாகாது.

வெள்ளையன் இருந்த காலத்திலாவது, இங்குள்ள மக்களுக்கு ஏற்பட்ட, ஏற்படும் அல்லல்கள் அனைத்துக்கும் ஆங்கிலேயன் மீதாவது குற்றம் சுமத்திக்கொண்டு, பொது மக்களின் இருதயங்களில் இடம்பெற காங்கிரஸ் தலைவர்களுக்கு அரியதோர் வாய்ப்பு இருந்தது. இதுபோலவே, பொதுமக்களுக்கும். வாழ்க்கையில் ஏற்படும் வெறுப்பு சலிப்புகளுக்கெல்லாம், ஆங்கில ஆட்சியைக் காய்வதின் மூலம் ஆத்திரம் அடங்கவும், காங்கிரஸ் தலைவர்களின் விடுதலை கீதம் கேட்டு மனச்சாந்தி பெறவும், நன்றி மறவாமல் அத்தலைவர்களைப் புகழ்ந்தேத்துவதின் மூலம் பொழுது போக்கவும், அரியதோர் வாய்ப்பு இருந்தது. ஆனால் இப்பொழுதோ, அந்த நிலையும், மக்களிடம் இருந்து, சுயராஜ்ய சீலர்களால் தட்டிப் பறிக்கப்பட்டு விட்டது.

மக்கள் தொகையில் பெரும்பாலோரை, வறுமைப் பிணி தீராப் பிணியாகப் பற்றிக்கொண்டிருக்கிறது. பட்டினியால் ஏற்படுகிற தொத்து நோய் வேறு அவர்களை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு, வறுமைப் பிணிக்கு வன்மையூட்டுகிறது. விமோசனமளிக்கக் கடமை கொண்டுள்ளவர்களோ, ஆற்றல் பெற்றுள்ளவர்களோ, ஓடுகிறார்கள்! ஆடுகிறார்கள்! பாடுகிறார்கள்!

போதனை, உபதேசம், ஆரூடம் எல்லாம் கலந்து கலந்து, கனமாகியுள்ள காங்கிரஸ் கனவான்கள் ஒவ்வொரு விநாடியும், அள்ளி அள்ளி பொதுமக்கள் பருகக் கொடுக்கிறார்கள். காதுக் கினிமை, வயிற்றை நிரப்பிவிடும் என்று ஆட்சி பீடமேறிகள் நம்புவது கிடையாது. அப்படித்தான் அவர்கள் நம்பிக்கொண்டு, அதைத், நல்லுரைகளாக நாட்டு மக்களுக்குத் தருகின்றனர் என அனைவரும் நம்பவேண்டும் என்று அவர்கள் மனப்பால் குடிக்கின்றனர்.

சென்னை மூர்மார்க்கெட்டில் பச்சிலை மூலிகை விற்பவன், வயிற்று வலி, கால் குடைச்சல், கண் எரிச்சல் ஆகிய எல்லாவற்றிற்கும் ஒரு மருந்தாக, சில பட்டைத் தூள்களையும், காய்ந்த சருகுகளின் பொடியையும் ஒன்றாகக் கலந்து, மிக மிகக் குறைந்த விலைக்குக் கொடுப்பான். வாங்குகிறவரும் அது 'சர்வரோக நிவாரணி' என்று நம்பித்தான் வாங்குவார்.

இந்த மூர்மார்க்கெட் மாத்தூள் மருத்துவரைப் போலத்தான், காங்கிரஸ் ஆட்சியாளர்கள் எதிர்க்கெடுத்தாலும், சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்பிருந்து 'ஐந்தாண்டுத் திட்டம்' என்று தங்களுடைய புத்திமட்டத்தைத் திட்டமாக்கி விளக்கி வந்தனர்.

தேர்தல் காலத்தில், தேர்தலில் கலந்துகொண்ட பண்டிதர் நேரு முதல், கழி கைபிடித்த களபதிகள்வரை 'ஐந்தாண்டு திட்டம் பாரீர்! எங்கள் மூளை வளம் தேரீர்! உரக்கவைத்து ஆதரவு தாரீர்!' என்று மோகனம் பாடினர். முடிவு, நாட்டு மக்களை நரகத்துக்குள் தள்ளிப்பிடித்துக் கொண்டு இருக்கிறது.

அகில உலகக் கண்கொண்ட ஆசிய ஜோதி உட்பட, அனைவரும் ஆனைகண்ட குருடர்கள் மாதிரி, முறம், உலக்கை, தூண் என்றெல்லாம் சொற்களாலே, தங்களுக்குள்ள குழப்பத்தை சித்தரித்து வருகிறார்கள்.

இந்த நல்லவர்களின் போக்கினாலே, நாட்டு மக்களுக்குக் கிடைத்துள்ளது நொந்த வாழ்வுதான் என்பதை கருவிலுள்ள சிசுகூட அனுபவத்தால் அறிந்திருக்கக்கூடும் என்பது அர்த்தமற்ற வார்த்தையாகாது.

பொதுமக்கள் வாழ்வுதான் வெம்பிக் கிடக்கிறதேயல்லாது, ஒன்றும் நெம்பர் தலைவர்களுக்கு ஏற்கனவே இருந்த சிதைந்த வாழ்வுகூட சிங்காரப் பூங்காவாக மாற்றம் பெற்று, கண்கவரும் காட்சியாகப் பரிணமித்து இருக்கிறது.

இப்பொழுது இவர்களுக்குப் பசியின் கொடுமை தெரிவதில்லை. இவர்கள், அதை மறந்துபோய் பலநாள் ஆகிவிட்டன. எனவே, இப்போது, அடிக்கடி, 'கந்தா, கடம்பா!' என்று, பாபத்துக்கு விமோசனம் தேடும் பணியிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். இடத்துக்கேற்ற புத்தி! நிலைமைக்கேற்ற நினைப்பு!

ஆனால், இவர்கள் காலம் முடிந்து போய்விட்டது இவர்களை அரசியல் மரணம் அணைத்துக்கொள்ள, இவர்களை நோக்கி விரைந்துகொண்டு இருக்கிறது. மக்களை மறந்த இவர்கள், மக்களின் எதிரிகள்! இவர்கள் அரசியல் செல்லாக் காசுகள்!

# காங்கிரஸ் கட்சியினர் நடத்தும் கள்ளுக்கடை!

## மதுவிலக்குப் பிரதேசத்தில் மது வாய்க்கால் திறப்பு

நாகபுரி, அக். 15—

மத்தியப் பிரதேச சட்டசபையில் கொண்டுவரப்பட்ட சர்க்கார் மான்ய கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது, எதிர்க்கட்சி முக்கியஸ்தரான எம். ஆர். அவாரி என்பவர்; சாராயத்தைக் காய்ச்சியும், அனுமதிக்கப்பட்ட ஏஜண்டுகள் மூலம் விற்றும் வருகிற சர்க்கார்; முழு மதுவிலக்கைக் கொண்டுவருவது எப்படி சாத்தியமாகும் என்றும், சில காங்கிரஸ் காண்டிராக்டர்களைக் கொண்டும் சாராயம் விற்க சட்டப்படி ஏற்பாடு செய்திருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

ஏற்கனவே மதுவிலக்குப் பிரதேசமாக இருந்துவந்த புக்டானா பகுதி இப்பொழுது 'அனுமதி பெற்ற மதுவிலக்கு' என்ற முறைக்கு மாற்றப்பட்டு இருக்கிறது என்றும், அங்கு சாராயம் விற்பவர்களில் சில காங்கிரஸ்காரர்களும் உள்ளனர் என்றும் எடுத்துக் கூறினர்.

சர்க்காரின் விளம்பர இலாகா, மந்திரிகளை விளம்பரப் படுத்தும் பணிபுரிகிறதேயல்லாது, சட்டசபையில் இயற்றப்படும் சட்டங்களைக் குறித்துக் கூட பொது மக்களுக்கு விளக்கிக் கூற முன்வருவதில்லை என்று, பி. எஸ். பி. உறுப்பினரான கே. ஆர். படேல் குறிப்பிட்டார்.

பிரேம்நாத் வாசனிக் பேசும்போது, சர்க்கார் புரிந்து கொள்ள முடியாத இந்தி சொற்களைப் புதிதாகப் படைப்பதற்காக பெருந்தொகையை விரயம் செய்கின்றனர் என்று எடுத்துக் காட்டினர்.

# பம்பாய் மார்வாரிகளுக்கா? மராட்டியர்களுக்கா?

## மற்றொரு சென்னையாகிறது பம்பாய்!

பம்பாய், அக். 13—

மகாராஷ்டிர அரசு அமைக்கக் கோரி, பம்பாய் சட்ட சபையில் கொண்டுவரப்பட்ட அதிகாரப் பற்றற்ற தீர்மான மொன்றை, மொரார்ஜி தேசாய், காலவரையரையின்றி ஒத்திவைத்த நோக்கத்தை பம்பாய் வர்த்தகர் புருஷோத்தம தாஸ் தாக்கூர் என்பவர் ஆதரித்துள்ளார்.

ஒரு அறிக்கையில் அவர், 'நாகபுரி கூட்டமொன்றில்எடுத்ததாக சொல்லப்படும் முடிவொன்றை, பொறுப்பும் நம்பிக்கையும் கொண்ட பதவி வகிக்கிற சில மந்திரிகள் உள்பட சிலர் விளம்பரப்படுத்துவதை மேற்கொண்டுள்ளது துரதிருஷ்டமே' என்றும், "மொழிவாரி அரசு கிளர்ச்சிகள், தேசிய ஒற்றுமையையும், பலத்தையும் வளர்ப்பதற்கு மாறாக, குறுகிய மனப்பான்மையான மாகாண ஆட்சிப்பித்து கொண்ட எண்ணங்களை வளர்க்கக்கூடியன" என்றும் வலியுறுத்தியுள்ளார்.

"பம்பாய் சர்வதேச நாகரிகமும், பல மொழியும் பேசப்படுவதுமான ஒரு நகரம். அது ஒரு மொழி பேசப்படும் மகாராஷ்டிர அரசின் தலைநகராய் ஒரு போதும் இருக்க முடியாது," என்று அவர் மேலும் சொன்னார்.

"பம்பாய் மாநிலம் திருத்தி அமைக்கப்பட்டால், பம்பாய் நகரம் ஒரு தனி 'அரசியல் பகுதி'யாகத்தான் எதிர் காலத்தில் இருக்கமுடியும் என்பதைக் காணலாம்," என்று கூறவதோடு, "இந்த நேரத்தில், மொழி வழி அரசு கோரிக்கை அசந்தர்ப்பமானது," என்ற எஸ். கே. பட்டீலின் அறிக்கையையும் அவர் வரவேற்றுள்ளார்.

### பெருந்தன்மை!

கராச்சி, அக். 15—

பாலஸ்தீன் அகதிகள் உதவி நிதிக்கு 1953-54-ம் ஆண்டிற்காக பாகிஸ்தான், ரூ. 1,00,000 அளித்துள்ளது. 1949-ம் ஆண்டு முதல் இதுவரை, பாகிஸ்தான், 17,48,700 ரூபாய் உதவியுள்ளது.

# நிபுணர்கள்தான் முடிவு கட்ட வேண்டும்

## நிதி மந்திரியின் கண்டுபிடிப்பு!

சென்னை, அக். 15—

நேற்றைய தினம் முஸ்லீம் பட்டதாரிகளுக்கு வரவேற்பு உபசாரம் ஒன்றை முஸ்லீம் கல்வி நிறுவனம் அளித்தது.

அதில் பங்குகொண்ட சென்னை சர்க்கார் நிதி அமைச்சர் தோழர் சுப்ரமணியம், தற்காலம் போதிக்கப்பட்டுவரும் கல்வி முறை பற்றி கண்டித்துக் கூறிவிட்டு, தனது குருநாதர் கொண்டுவந்துள்ள புதிய கல்வித் திட்டம் பற்றி புகழ்ந்து பேசினார். முடிவாகக் கூறும்பொழுது, "இந்த மாற்றம் நல்லதா, கெட்டதா என்பதை முடிவு கட்டும் பொறுப்பு நிபுணர்களைச் சேர்ந்ததாகும்" என்றார்.

அடுத்தக் கட்டம், இவர்களை அலட்சியப்படுத்தி ஒதுக்கிவிடும். பொதுமக்களின், கொந்தளிப்பு வெள்ளத்தால், இவர்கள் செயலற்று, ஆங்காங்கே ஓரங்களில் ஒதுக்கப்பட்டுவிடுவர். பின்னர் அரசியல் கல்லறையில்தான் இவர்களுடைய அதிகாரம், ஆர்ப்பாட்டம், பவனி, யாக்கு எல்லாம் நடைபெறும் என்பது திண்ணம்.

வரலாறு இதைத்தான் சுட்டிக் காட்டுகிறது. இந்த வரலாறு கற்றவர்கள்,இதை வெளிப்படையாகச்சொல்லாமல், அரசியல் சுதந்திரப் போராட்டம் நடந்துவிட்டது, இனி பொருளாதார சுதந்திரப் போராட்டம் பாக்கி இருக்கிறது என்று பக்குவமாகப் பேசுகிறார்கள்.

காங்கிரஸ் படையினர் பல்லக்கேறும் பண்பினர். அந்தப் பண்பு, அவர்களுக்குக் கிடைத்துள்ள பரம்பரை சொத்து!

கார் ஓட்டி, கார் ஓட்டுவதிலே திறமைசாலியாக இருக்கலாம்! ஆனால், கடலிலே கலம் செலுத்த அவனால் முடியாது! அதற்குத் தனித் திறமை, தனிப் பயிற்சி அவசியம் தேவை!

இந்த உண்மையை விளக்கமாகத் தெரிந்திருக்கிற சிலர், காங்கிரசை எதிர்நோக்கி உள்ள அபாயத்தை அறிவிக்கிறார்கள். வெள்ளம் அணையிட்டு அணைக்க முடியாத கட்டத்தை அடைந்துவிட்டது என்று கூறி முடிக்கின்றோம்.

# பிரிட்டிஷ் அணு ஆயுத சோதனை

## 15 மைலுக்கப்பால் வெடி அதிர்ச்சி தாக்கியது

வூமேரா, அக். 15—

இங்கு, இன்று பிரிட்டனின் புது அணு ஆயுதம் வெடிக்கப்பட்டதும், பிரகாசமான தீ ஜுவாலை பந்து போன்று, உயர எழுந்ததாம்; அதிலிருந்து, சிவப்பும் சாம்பலும் கலந்த புகை ஆகாயத்தில் பாய்ந்தெழுந்தது; பின்னர் குடைபோல் புகை விரிந்து பரவியது.

வெடி அதிர்ச்சி, மைதானத்திலிருந்து 15 மைல்களுக்கப்பாலிருந்த பார்வையாளர்களைத் தாக்கியது. அப்போது எழுந்த ஒளி, கதிரொளியையும் மங்கச் செய்ததாம்.

இரண்டாவது பரீட்சை, விரைவில் நடத்தப்படுமென பிரிட்டிஷ் அணுசக்தி விஞ்ஞானி சர்வில்லியம் பென்னி தெரிவித்துள்ளதாகவும் தெரிகிறது.

# காங்கிரசின் மதிப்பு நீராவியாகிறது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்மா எடுத்துக் காட்டினர்.

தன்னுடைய அமைச்சர் குழுவில் உள்ள ஒரு அமைச்சரின் நிர்வாக விவகாரங்களில் முதல் மந்திரி குறுக்கிட்டு செய்த சில காரியங்களுக்கு எழுத்து மூலமான அத்தாட்சிகளையும் சட்டசபையில் படித்துக் காண்பித்தார் அவர். இதுபோன்ற பல விவகாரங்கள், சர்க்கார்மீது அதிருப்திக் கொள்ளும் நிலைமையைத் தனக்குக் கொடுத்ததாகச் சர்மா குறிப்பிட்டார்.

சர்க்கார் உத்தியோக நியமன விவகாரங்களிலும், புதிய தலைநகரான சாந்திகருக்கு சட்டசபைத் தலைவருக்கே உரிமையுடைய தலைவர் காரியாலயத்தை மாற்றும் விஷயத்திலும், சட்டசபை கூட்டும் விஷயத்திலும் தன்னடிச்சப் போக்காகவே பிரதம மந்திரி நடந்துகொண்டு இருக்கிறார் என்று பலமான குற்றச்சாட்டுகளை ஸ்ரீராம சர்மா சாட்டியுள்ளார்.

### இரண்டு தலை பாம்பு!

கௌஹாத்தி, அக். 14—

விஷமில்லாத இரண்டு தலைப் பாம்பு ஒன்று இங்கு கிடைத்திருக்கிறது. திப்ருகார் கல்லூரி விஞ்ஞானப் பகுதியில் இந்த பாம்பு பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது. உலகத்திலேயே இம்மாதிரி கிடைத்திருப்பது, இது, இரண்டாவது முறையாகும்.

### நல்ல திட்டந்தான்!

பவால்பூரிலுள்ள சோலிஸ்தானில் வசிக்கும் நாடோடி சமூகத்தினருக்குக் கைத்தொழில்கள் கற்றுத் தர, பவால்பூர் மத்திய சிறைக் கைதிகள் பயன்படுத்தப்படுவர் என்று தெரிகிறது.

# சி. ஆர். என்று நினைத்தாலே, 'சூதும் வாதும் வேதனையும்தான் எல்லோருக்கும் உண்டாகிறது!'

## 'இரண்டாந்தர-மூன்றுந்தரத்தை' சார்ந்தவர் ஆச்சாரியார்!

### 'வகுப்புவாதி' என்ற சொல்லின் பிறப்பு-வளர்ப்பு பற்றிய விளக்கம்

### ஆச்சாரியார் குறித்து, தோழர் டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களின் 'ஜனயுகம்' தீட்டியுள்ள நிழல் படம்

"கொஞ்சம் இலக்கணத்துடன் அல்லது பண்டைய தமிழ் மரபுடன் கூடிய முறையில் ஒருவன் தமிழ் பேசினால், அவனை வகுப்புவாதி என்று ஒரு கூட்டத்தார் முடிவு கட்டிவிடுகிறார்கள். 'தமிழில் பாட வேண்டும்' என்று ஒருவன் வற்புறுத்தினால், அவனும் வகுப்புவாத வெறியன்தான். 'மகன்' என்று சாதாரணமாக எழுதுகிறவர்கள், 'மகான்' என்ற சொல் வரும்போது, 'மஹான்' என்று, திடீரென 'ஹ' என்ற எழுத்தைக் கொண்டுவந்து திணிப்பார்கள். 'இது ஏன் இப்படி?' என்று கேட்கிறவர்கள் 'வகுப்புவாதி' என்ற பட்டத்தைக் கட்டிக்கொள்ள வேண்டியதுதான். இந்த மாதிரி இருக்கிறது, இன்றைய தமிழ் நாட்டிலுள்ள நியாய உணர்ச்சி!"

"ராஜாஜி நல்ல புத்திசாலி என்று நேருவும் இன்னும் பலரும் ஏராளமாகச் சொல்லிக்கொண்டிருக்கட்டும்; அதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபணையில்லை. இந்த நாடு எத்தனையோ புத்திசாலிகளை உண்டாக்கி, வாழ வைத்து, அழித்து இருக்கின்றது. இவர்களைப்போல ராஜாஜியும் ஒருவராக இருக்கட்டும்."

"மக்களிடையே ஏற்கனவேயுள்ள வேற்றுமை உணர்ச்சியைக் கிளப்பி ஆத்திரமூட்டும் வகையில் தேவாசுரர்கள் கதையையும், மூட்டைப்பூச்சி, எறும்பு விஷயங்களையும் சொல்லிக்கொண்டிருப்பதில் தீர்க்க புத்தியோ, தீட்சண்யமோ இருப்பதாகத் தெரியவில்லை."

"ராஜாஜி என்று பெயர் சொன்னமாத்திரத்தில் ஆதி சங்கரன், புத்தர், ஏசு, முகமது ஆகியோர் மீது ஏற்படும் பக்தி உண்டாகவில்லை. மகாத்மா காந்தி என்று சொன்னவுடன் நம் உள்ளத்தில் ஏற்படுகின்ற அன்பும் உண்டாகவில்லை. ராஜாஜி என்றதுமே ஒரு பயமும், அவர் எதைப்பற்றி பேசினாலும் அதிலே ஒரு மர்மம் இருக்குமென்ற எண்ணமும், சூதும் வாதும் வேதனையுந்தான் எல்லோருக்கும் உண்டாகிறதே ஒழிய, அவர் 'நம் தலைவர்' 'என் தலைவர்' என்ற உள்ளன்பு உதிக்கக் காணோம். இதைக் கீழ்ப்பாக்கம் கோஷ்டி உள்பட யாருமே மறுக்க முடியாது."

#### குழப்பம்

ராஜாஜிக்கு வர வர இன்னதைத்தான் பேசலாம், இன்னதையெல்லாம் பேசக்கூடாது என்பதே தெரியவில்லை. எந்த இடத்தில், யாரிடம், எதைப் பற்றி, எந்த அளவுக்குப் பேசுவது என்பதைச் சிந்திக்காமல், 'தூக்கிப் போட்டேன்; கழுத்தறுத்தேன்' என்கிறமாதிரி அவர் பேசிக்கொண்டு போகிறார். சமீப காலமாக, அவருடைய இந்தப் போக்கு, கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கிறது.

#### பிரச்னை

தமிழ்நாட்டு அரசியலில், வகுப்புவாத உணர்ச்சி ஒரு முக்கியமான அம்சமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் மூடிவைப்பதில் பிரயோசனமில்லை. இந்தப் பிரச்னைக்கு ஒரு வழி காண வேண்டுமென்பது, ரொம்ப அவசியமும் அவசரமுமாகும். இது எத்தனையோ நூற்றாண்டு காலமாக இருந்து வருகின்ற 'போராட்டம்' என்பதை ஒரு கூட்டத்தார் உணராமல் இருக்கலாம்; ஆனால், தமிழகத்தைப் பொறுத்தமட்டில், இந்தப் பிரச்னைக்கு ஒரு பரிகாரம் ஏற்படாமல், எத்தகைய முற்போக்கான திட்டமும் உருவாக்கப்பட முடியாது. ஏனெனில், தமிழ் நாட்டிலுள்ள மக்களின் அன்றாட வாழ்க்கையில், இந்த வேற்றுமை சகலவற்றிலும் பின்னிக்கொண்டு கிடக்கிறது.

#### வகுப்புவாதம்

கொஞ்சம் இலக்கணத்துடன் அல்லது பண்டைய தமிழ் மரபுடன் கூடிய முறையில் ஒருவன் தமிழ் பேசினால், அவனை வகுப்புவாதி என்று ஒரு கூட்டத்தார் முடிவு கட்டிவிடுகிறார்கள் 'தமிழில் பாடவேண்டும்' என்று ஒருவன் வற்புறுத்தினால், அவனும் வகுப்புவாத வெறியன் தான். 'மகன்' என்று சாதாரணமாக எழுதுகிறவர்கள், 'மகான்' என்ற சொல் வரும்போது, 'மஹான்' என்று, திடீரென 'ஹ' என்ற எழுத்தைக் கொண்டுவந்து திணிப்பார்கள். 'இது ஏன் இப்படி?' என்று கேட்கிறவர்கள் 'வகுப்புவாதி' என்ற பட்டத்தை கட்டிக்கொள்ள வேண்டியது தான். இந்த மாதிரி இருக்கிறது, இன்றைய தமிழ் நாட்டிலுள்ள நியாய உணர்ச்சி!

#### பண்பாடு

மொழியில் மட்டுமல்ல; நடை, உடை, பாவனை, மனப் பண்பாடு ஆகிய எல்லாவற்றிலுமே அடிப்படையான வேற்றுமையுண்டு என ஒரு கூட்டத்தார், ஆதி காலம் முதல் இன்றைய வரையில் உள்ள சரித்திரத்திலிருந்து பல உதாரணங்களை எடுத்துக் காட்டி வருகிறார்கள்.

இப்படிச் சொல்லிக் கொண்டு வந்த 'ஜஸ்டிஸ்' கட்சி, சுமார் 15 வருஷ காலம் ஆட்சி நடத்திவிட்டு, பிறகு, மண்ணோடு மண்ணாய்ப் போய் விடவில்லையா என்று கேட்கலாம். ஆனால் அக்கட்சியின் கொள்கைகள் மறைந்து மண் மூடிப் போய்விட்டனவா என்றுதான் நான் கேட்கிறேன். அவர்களுடைய உணர்ச்சியும், கொள்கைகளும், அவை நல்லவையோ கெட்டவையோ, இன்று அதிகமாகப் பரவிக் கிடக்கின்றன என்பதுதான் உண்மை. ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் மீது வெறுப்பு மட்டும் கொண்டிருந்தார்களே ஒழிய, இன்றுள்ள அளவுக்கு அவ்வளவு க்ஷாத்திரம் கொண்டிருக்கவில்லை அவர்கள் சமூக சீர்திருத்தவாதிகளாய் மட்டுமே விளங்கினார்கள். ஆனால் பின்னர் தோன்றிய சுயமரியாதை இயக்கமும், அந்த இயக்கத்தின் இரு கூறுகளாய் வகுத்துக்கொண்ட திராவிட கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும், மூடப் பழக்க வழக்கங்களை எதிர்ப்பதோடு மட்டுமல்லாமல், சாதி, மதம், கடவுள் நம்பிக்கை ஆகிய அடிப்படையான விஷயங்களிலேயும் கூட கைவைக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதிலுள்ள மூல விஷயம் இதுதான். ஒரு வகுப்பாரின்கொள்கைகள், அவர்கள் பேசும் மொழி, அவர்களுடைய அனுதாபம் ஆகியவை இத்தமிழ் நாட்டின் மக்களுடைய மொழிக்கும், பண்பாட்டுக்கும், கோட்பாடுகளுக்கும் முற்றும் முரண்பட்டவை யென்பதை வேறுபடுத்தி விளக்கக் காட்ட முயன்று வருகிறார்கள்.

* * *

#### வளர்ச்சி

இந்த மாதிரியான ஒரு கண்ணோட்டம் இந்த அநேக வருஷ காலமாகவே இருந்து வருகிறதென்றாலும், இன்றைக்கு இது ரொம்பவும் பயங்கரமான அளவில் காட்சியளிக்கிறது. பாமரர்களில் பலர் இப்புதிய கண்ணோட்டத்தில் தான் எதையும் கவனிக்கிறார்கள். படித்தவர்களிலேயும் கூட, அநேகம் பேர் இதைப் பற்றிக் கவலையுடன் சிந்தித்து வருகிறார்கள்.

#### சினம்

கற்புக்கரசிகள் ஜவரில் மண்டோதரியும் ஒருத்தி என்று படித்திருக்கின்ற இளைஞர்கள், 'அவள் வைத்ததைப்பல்லி, கோட்டுவாய் படிந்தவள், சீலைப் பேன்காரி' என்று கம்பன் கண்டுள்ள வர்ணனையைக் கேட்டதும், "நம் பெண் இனத்தையே அவமதித்திருக்கிறார்கள்" என்று ஆத்திரப்படுகிறார்கள். சீதையைக் கண்டு வர அனுமானைத் தூது அனுப்பும் ராமன், சீதையின் சர்வாங்கங்களையும் அனுமனிடம் வர்ணித்ததாகக் கேட்டவுடன், "ஐயோ, இது தமிழ் நாட்டுப் பண்பல்லவே" என்று வெட்கிக் குமுறுகிறார்கள். இப்படியாக இருக்கின்றது இன்றைய வாலிபர்களின் எண்ணக் கிளர்ச்சி.

* * *

#### தூபம்

இப்படிப்பட்ட ஒருநிலைமையில் அதாவது எதையுமே வகுப்புவாதக் கண்களோடு பார்க்கும் வேளையில், என்றைக்கோ எப்போதோ நிகழ்ந்ததாகக் கூறப்படும் தேவாசுரர்கள் வாழ்க்கையை ராஜாஜி ஞாபகப்படுத்துகிறார். காங்கிரஸ்காரர்கள்—காங்கிரஸ் அல்லாதார்கள் என்ற வாதத்தின் கீழ், இந்த தேவாசுரர்கள் கதையை ராஜாஜி சொன்னாலும்கூட, இதை ஒப்பிட்டுச் சொல்லுவது பொருந்துமா, இது அவசியந்தானா, இதனால் வகுப்புணர்ச்சி குறையுமா வளருமா என்பதையெல்லாம் சிறிதும் சிந்தித்துப் பார்க்காமலே பேசிவிட்டார். ஏற்கனவே உள்ள குரோதத்தை இது வளர்த்துவிடுகிறதே ஒழிய, தணிப்பதாக இல்லை.

#### சூனியம்

ராஜாஜி நல்ல புத்திசாலி என்று நேருவும் இன்னும் பலரும் ஏராளமாகச் சொல்லிக் கொண்டிருக்கட்டும், அதைப் பற்றி யாருக்கும் ஆட்சேபணையில்லை. இந்த நாடு எத்தனையோ புத்திசாலிகளை உண்டாக்கி, வாழ வைத்து, அழித்து இருக்கின்றது இவர்களைப்போல ராஜாஜியும் ஒருவராக இருக்கட்டும்.

ஆனால், புத்திசாலித்தனமும், அறிவும் நாட்டுக்குப் பயன்படக் கூடிய அளவில் இருக்கவேண்டும் மக்களிடையே ஒற்றுமை ஏற்படுவதற்கான வகையில் அதை அவர் உபயோகிக்க வேண்டும் கடவுள் இதற்காகத்தான் அறிவையும் புத்திசாலித் தனத்தையும் ஒருவருக்கு அளிக்கின்றார். அறிவு இருக்கின்ற இடத்தில் கட்டாயம் அன்பும் இருக்கும் மக்களிடையே ஏற்கனவேயுள்ள வேற்றுமை உணர்ச்சியைக் கிளப்பி ஆத்திரமூட்டும் வகையில் தேவாசுரர்கள் கதையையும், மூட்டைப்பூச்சி, எறும்பு விஷயங்களையும் சொல்லிக்கொண்டிருப்பதில் தீர்க்க புத்தியோ, தீட்சண்யமோ இருப்பதாகத் தெரியவில்லை.

#### அச்சம்

ராஜாஜி என்று பெயர் சொன்ன மாத்திரத்தில் ஆதி சங்கரன், புத்தர், ஏசு, முகமது ஆகியோர்மீது ஏற்படும் பக்தி உண்டாகவில்லை. மகாத்மாகாந்தி என்று சொன்னவுடன் நம் உள்ளத்தில் ஏற்படுகின்ற அன்பும் உண்டாகவில்லை. ராஜாஜி என்றதுமே ஒரு பயமும், அவர் எதைப்பற்றி பேசினாலும் அதிலே ஒரு மர்மம் இருக்குமென்ற எண்ணமும், சூதும் வாதும் வேதனையுந்தான் எல்லோருக்கும் உண்டாகிறதே ஒழிய, அவர் 'நம் தலைவர்' 'என் தலைவர்' என்ற உள்ளன்பு உதிக்கக் காணோம். இதைக் கீழ்ப்பாக்கம் கோஷ்டி உள்பட யாருமே மறுக்க முடியாது.

* * *

#### பக்குவம் வராது

ஹிந்து-முஸ்லிம் வேற்றுமை குமுறிக்கொண்டிருந்த வங்காளத்தில் தோன்றிய தலைவர் சுபாஸ் சந்திரபோஸ், இந்தியாவில் பிறந்த ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் ஆகிய சகலரையும் ஒன்றுபடுத்தினார். ஹிந்துக்களை அறவே ஒழிக்கவேண்டுமென்று விருது கூறிய இந்திய முஸ்லிம்கள் விஷயத்தில் காந்திஜி எப்படி நடந்துகொண்டார்? இந்திய முஸ்லிம் ஒருவரின் தொடையில் தலை வைத்து உயிர்விட வேண்டுமென்பதே எனது ஆசையென்று கூறிய தோடல்லாமல், இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக தமது உயிரையே தியாகம் செய்தார். இத்தகைய பக்குவ நிலையையும் விவேகத்தை பெறாமல், தமிழ் நாட்டில் இருக்கிற கட்சிகளில், ஒவ்வொன்றுக, 'நீதான் ஒன்னும் நம்பர் எதிரி, நீதான் ஒன்னும் நம்பர் எதிரி' என்று சொல்லிக்கொண்டு திரிவது இரண்டாந்தர, மூன்றாந்தர தலைவர்களுக்குப் பொருத்தமாயிருக்கலாம். அதி மேதாவி, அதி புத்திசாலி, ஞானி, மகான், மேதை என்றெல்லாம் பேசிக் கொண்டும் எழுதிக்கொண்டுமிருப்பதால், அத்தகையவர்களின் பக்குவ நிலையை அடைந்து விட முடியாது.

#### பொறுப்பு

ராஜாஜி போன்றவர்கள் இன்று இருப்பார்கள் போவார்கள், நேருவைப் போன்ற தலைவர்கள் இவர்களைப் பெரும் புத்திசாலிகள் என்று சொல்லிவிட்டுவிமானமேறி விடுவார்கள். ஆனால், ராஜாஜியின் எதிர்கால சந்ததிகளும் இந்நாட்டிலுள்ள ஏனையவர்களும் இந்த தமிழ் நாட்டில் தான் நிரந்தரமாக இருந்து வாழ வேண்டும். ராஜாஜி இதை உணர்ந்து பேசுவாராக.

# கல்லக்குடி அறப்போர்

★

இன்று 95-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில் இன்று 94-வது நாள்

---

# மொழிவழி மாநிலம் பற்றி நேரு கூறினது உறுதிமொழி அல்ல

### கர்நாடக அமைப்பு குறித்து கன்னடப் பிரமுகர்

தார்வார், அக். 15—

அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும்வரை, கர்நாடக அரசு அமைக்கக் கோரி கன்னடியர்கள் கிளர்ச்சி நடத்த வேண்டுமென, கன்னடம் பேசும் ஹைதராபாத் தொகுதி பார்லிமெண்டு அங்கத்தினரும், கர்நாடக நிர்மாண பரிஷித்தின் துணைத்தலைவருமான தோழர் சிவமூர்த்திசாமி, கன்னடியர்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும், இந்தப் பிரச்சினை பற்றி சமீபத்தில் நேரு சென்னையிலும், கர்நூலிலும் பேசியவை குழப்பமானதாயும், நிச்சயமற்றதாயும் இருப்பதாகவும், அவைகளை உறுதி மொழிகள் என்றெண்ணுவது தவறெனவும் குறிப்பிட்டார்.

---

ராயல் பாகிஸ்தான் விமானப் படையைச் சேர்ந்த விமானங்கள் அடிக்கடி விபத்திற்கு உள்ளாவதை, பாகிஸ்தான் பிரதமர் கவனத்திற்குக் கொண்டுவந்து, இதற்கான காரணத்தைக் கண்டறியுமாறு பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையைச் சேர்ந்த 6 மெம்பர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். இயந்திரங்களிலுள்ள கோளாறுகள், இந்த விபத்திற்குக் காரணமா என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

# காங்கிரசிற்கு ஆச்சாரியார் செய்யும் துரோகம்

## அந்நாள் தலைவர்களுக்குச் சாபமிடுகிறார்

"நம் நாட்டை பிரிட்டிஷார் ஆண்டுவந்த காலத்தில், ஜனங்களுக்கு உணர்ச்சி ஏற்படும்படி எப்படியோ அப்போது தலைவர்கள் செய்து விட்டார்கள். ஜனங்களை ஒன்ருகச் சேர்த்து பிரிட்டிஷாருடைய எதிர்ப்பைத் தோற்கடித்து, நம் முயற்சி வெற்றி பெறும் ஏற்பாடுகளைச் செய்து விட்டார்கள். அந்தக் காலத்தில் மக்கள் உணர்ச்சியைத் திரட்டியவர்கள் மறைந்துவிட்டார்கள். அவர்கள் இப்போது உயிருடன் இருந்திருந்தால், அவர்களை நான் கேட்பேன்—'அன்று உணர்ச்சியை மக்களிடையே புகுத்தி, அன்று நீங்கள் செய்த முறை எப்படி வந்து சேர்ந்திருக்கிறது?' என்று. உணர்ச்சிக் கூட்டமாக வந்து கூப்பாடு போடுவதில் வந்து சேர்ந்திருக்கிறது"

★

"மகாத்மா காந்தி உப்பு எடுத்தார்; சிறைக்குப் போனார். அவர் ரயில் தண்டவாளத்தைப் பெயர்த்தாரா? வேண்டாமென்றுதான் சொன்னார். அவர் சொன்னதைக் கேட்காமல் வேறு சிலர் செய்ததை, அவரைக் காட்டி சொல்வது சரியல்ல."

★

"ரயிலை மகாத்மா காந்தி இழுத்ததில்லை; அவர் போகட்டும்—நானாவது இழுத்தேனா? நானும் இழுத்ததில்லை; அது தவறு, தவறு, தவறு என்றுதான் ஆதிமுதல் நான் கூறிவந்திருக்கிறேன்."

★

"தேர்ந்தெடுக்கப்பட்டவன் அறிவாளியாக இருந்தாலும், மூடன், முரடனாக இருந்தாலும், ஒரு காலவரை, பிரதிநிதியாக இருக்க வேண்டுமென நியமிக்கப்பட்டிருக்கிறது. குற்றங் குறைகள், தேர்ந்தெடுக்கப் பட்டோரிடமிருந்தால், அதற்கான பட்டியலைத் தயாரித்து, இதை வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர், மறுதேர்தல் வரும்போது, அவற்றைச் சொல்லி மாற்றிக் கொள்ளலாம்; இதுதான் குடியரசு சர்க்கார்."

—திருவொற்றியூரில் ஆச்சாரியார் 18-9-53.

# கழகக் கூட்டங்கள்

★

## எலந்தங்குடி:

18—10—53 ஞாயிறு மாலை

தோழியர் இராமாமிர்தத்தம்மையார் தலைமையில்

பேசுவோர்:

வி. ஏ பாண்டியன்

எம். கிட்டப்பா

அருணாசலம்

செங்குட்டுவன்

முரசொலி

★

## வலம்பாடி:

17—10—53 சனி மாலை

தலைவர்: ஏ. கே. சின்னப்பன்

பேச்சாளர்கள்:

சி. பி. சிற்றரசு

எம். எஸ் மணி

ஏ. பி தர்மலிங்கம்

மதிவாணன்

★

## திருவொற்றியூர்:

18—10—53 ஞாயிறு மாலை

தலைவர்:

டி. சண்முகம் எம். எல். ஏ.

பேச்சாளர்கள்:

டி. வி. நாராயணசாமி

சி. வி. எம். அண்ணாமலை

முகவை-ஆர்.எஸ்.பாண்டியன்

எஸ். எஸ். தென்னரசு

# சோவியத் விவசாயத்தில் மாறுதல்

## கண்காணிப்போர்மீது 'பிராவ்டா'வின் அதிருப்தி

"ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சி, சென்ற மாதம் தீர்மானிக்கப் பட்ட புதிய விவசாயச் சீர்திருத் தங்களை ஆரம்பிப்பதில், வெகுவாகக் கவனிக்கப்பட வேண்டியிருக்கிறது; கட்சியின் கிராமப் பகுதி அமைப்புகள் திறமையற்றனவாகவும், சரியான தலைமையில் இல்லாமலும் இருக்கின்றன"

—இவ்வாறு 'ப்ராவ்டா' பத்திரிகை தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

மேலும், "ஆயிரக்கணக்கான கட்சி அங்கத்தினர்களும் நிபுணர்களும் கிராமப் பகுதிகளுக்கு ஏற்கனவே சென்றிருந்தாலுங்கூட, குழப்பத்தையும், 'குறைபாடு' களையும் தவிர, அவர்களால் வேறெதுவும் செய்ய இயலவில்லை," என்றும் குறிப்பிட்டுள்ளது.

"கிராமாந்திர கட்சி அமைப்புகளின் வேலைகளில் தீவிரமான மாற்றங்கள் அமுலாக்கப்பட வேண்டும்" என எச்சரித்துவிட்டு, "முக்கிய கட்சி அதிகாரிகளோ, அத்தகைய கூட்டுப் பண்ணைகளின் வேலைகளை மேற்பார்வை யிடுவதற்கு நியமிக்க வேண்டும்," என்றும் கூறியுள்ளது.

"விவசாய வேலைகளைக் கவனித்து வரும் கட்சி அமைப்புகள் அதிருப்திகரமாயும், அதிகாரதோரணையாயும் இருப்பதோடு, அதிகாரிகள் புதிய திட்டங்களை நிறைவேற்றுவதில், தங்களுக்குள்ள பொறுப்பை தட்டிக் கழிக்கின்றனர்" என்றும் அப்பத்திரிகை அறிவிக்கிறது.

தேசியப் பொருளாதாரத்திற்காக, புதிய விவசாயத் திட்டங்களின் அவசியத்தை வலியுறுத்தி, "கடமையை நிறைவேற்றுவதற்கான நடைமுறை வேலைகள் இன்னும் சரியாக துவக்கப்படவில்லை" என்றும், அது குறை கூறியுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு, கட்சிச் செயலாளர் நிகிடா க்ருஷ்சேவ் தந்த பெரியதொரு அறிக்கைக்குப் பிறகு, விவசாயச் சீர்திருத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அந்த அறிக்கை; கால் நடை, காய்கறிகள் ஆகியவற்றின் உற்பத்தி, 'ஜார் ரஷ்யா'வைக் காட்டிலும் குறைவாகவுள்ளதென ஒப்புக்கொண்டுள்ளது. தனது அறிக்கையில் க்ருஷ்சேவ், 50,000 கட்சி ஊழியர்களும், 1,00,000 விவசாய நிபுணர்களும் விவசாய முன்னேற்றத்தைக் கண்காணிக்க கிராமப் பகுதிகளுக்கு அனுப்பப்பட வேண்டுமென யோசனை கூறியுள்ளார்.

# பிறப்பு

திருமங்கலம் தோழர் ந. தனுஷ்கோடி அவர்களுக்கு 2—10—53ல் ஆண் மகவு பிறந்தது குறித்து 'நம் நாடு' வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் அன்பளிக்கப் பட்டது.

• • •

தென்னூர் தோழர் சங்கிலிக்கு 22—9—53ல் பிறந்த பெண் மகவுக்கு 'ராணி' என்று பெயர் சூட்டியதின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது.

• • •

உசிலம்பட்டி தோழர் மாணிக்கம் அவர்களின் பெண் மகவுக்கு 'பூங்கோதை' எனப் பெயர் சூட்டியதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப் பட்டது.

• • •

சிதம்பரம் தோழர் வி.வைரக்கண்ணு அவர்களின் துணைவி கோவிந்தம்மாளுக்கு பிறந்த ஆண் மகவுக்கு 'தமிழரசன்' எனப் பெயரிட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் அன்பளிக்கப்பட்டது.

• • •

ஆமதாபாத் தோழர் ந. பெருமாள் அவர்களின் குழந்தைக்கு 'நெடுஞ்செழியன்' எனப் பெயரிட்டதின் காரணமாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1. நன்கொடை அளிக்கப்பட்டது.

* * *

சின்னமனூர் தோழர் கா. சிவசாமிநாதன் அவர்களின் குழந்தைக்கு 'வேணி' என்று பெயர் வைத்ததை நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப் பட்டது.

★

# திருமணம்

தோழர் கோவிந்தசாமிக்கும், தோழியர் ஜெயலக்ஷ்மிக்கும் சென்ற மாதம் நடைபெற்ற வாழ்க்கை ஒப்பந்தத்தை முன்னிட்டு 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 3 அன்பளிக்கப்பட்டது.

* * *

பெங்களூர் அழகிரி மன்றத்தைச் சேர்ந்த தோழர் எஸ். பி. ராஜகோபாலன் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1. நன்கொடை அளிக்கப் பட்டது.

[மேலே குறிப்பிட்டுள்ள நன்கொடைகள் வரப்பெற்றோம்—நன்றியுடையது.—பொறுப்பாளர்.]

# கயானாவில் அடக்குமுறை அவசியம்தானாம்!

## பிரிட்டிஷ் அமைச்சர் பசப்பல்

லண்டன், அக். 15—

கயானாவில் நிரந்தரமான நிலைமையை ஏற்படுத்தவும், அதன் பொருளாதார நிலையைச் சரிப்படுத்தவும் பிரிட்டன் நடவடிக்கை எடுக்க நேர்ந்தது என்றும், பிரிட்டிஷ் காலனி மந்திரி சர் ஆலிவர் லிட்டில்டன் இன்று இரவு கன்சர்வேடிவ்களின் கூட்டத்தில் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், பிரிட்டன் அவ்வாறு நடந்து கொள்ளாதிருந்தால், வேற்றார் தலையிட்டிருக்கக் கூடும் என்றும் அவர் சொன்னார்.

கயானாவில், பிரிட்டிஷார் கையாண்ட அடக்குமுறையைக் கண்டித்து, ஐ. நா. தர்மகர்த்தா சபையில் குவாடிமாலா பேசினார்.

கயானாவின் கரும்புத் தோட்ட தொழிலாளியர் 6,000 பேர், பிரிட்டிஷாரின் அடக்குமுறையைக் கண்டிக்கும் வகையில் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

### புதிய கல்வித் திட்டம்

பாருலேக்கர் விவாதம்

சென்னை, அக் 14—

புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை பரிசீலனை செய்ய ஆட்சியாளரால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் தலைவர் பாருலேகர், நேற்றிரவு பம்பாயிலிருந்து இங்குவந்து சேர்ந்தார்.

ஆந்திர மாநில கல்வி இலாகா டைரக்டர் என் கோவிந்தராஜுலு நாயுடுவையும், சென்னை மாநில கல்வி இலாகா டைரக்டர் ஓ. சி. சீனிவாசனையும் அவர் நேற்றிரவு சந்தித்தார். அவர்களிடம் புதிய கல்வித் திட்டம் பற்றி விவாதித்தார்.

கல்வி இலாகா உதவி டைரக்டர் என். டி. சுந்தர வடிவேலும், எலிமெண்டரி ஆதாரக் கல்வி சென்னை சர்க்கார் ஆலோசகர் ஜி ராமச்சந்திரனும் இவ் விவாதத்தில் கலந்துகொண்டனர்.

### பாளையங்கோட்டையில் பொதுக்கூட்டம்

பாளையங்கோட்டை அக். 15—

11—10—53-ல், தி. மு. கழக சார்பில், ஜவகர் மைதானத்தில், தோழர் நாராயணன் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் அபிசேகமணி, கடவுள் தலைவன், மதுரை எம். ஆர். கணேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். செயற்குழு உறுப்பினர் தோழர் கனகசபாபதியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

# ஆண்டு விழாவும் பாராட்டும்

சென்னை, அக் 16—

சென்னை இலட்சிய மன்றத்தின் 3-ம் ஆண்டு விழாவும், சிறை சென்று வந்த சி. ஆர். பாலசுந்தரத்திற்குப் பாராட்டும், 17—10—53 அன்று மாலை நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி தலைமையில் நடைபெறும். புரட்சி நடிகர் எம். எஸ். ராஜேந்திரன், நகைமணி டி. வி. நாராயணசாமி, தோழர்கள் வி.எஸ். கோவிந்தராசன், வி. முனுசாமி ஆகியோர் பேசுவர்.

# பலப் பரிசோதனையில் இத்தாலியும் யூகோவும்

## டிரீஸ்டி கிளப்பும் புகை

ரோம், அக். 15—

டிரீஸ்டி தகராறைத் தீர்க்க யூகோஸ்லேவியாவுடனும், மற்றும் நட்பு நாடுகளுடனும் கலந்து பேச இத்தாலி தயாராக இருப்பதாக இத்தாலிய பிரதம மந்திரி கூறினார்.

ஆனால், அதற்கு முன், 'ஏ' பகுதி, இத்தாலியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் அல்லது 'பி' பகுதியிலிருந்து யூகோ. படைகள் வெளியேற வேண்டுமென்று அவர் சொன்னார்.

இது இவ்வாறு இருக்க, 'பி' பகுதிக்குள் அந்நியர் நுழையக் கூடாதென யூகோ சர்க்கார் கூறியிருக்கிறது. யூகோவின் இப்பகுதிக்கு புதுப்படைகள் அனுப்பப்படுவதாகவும், ஏற்கெனவே 20,000 துருப்புகள் அங்கிருப்பதாகவும் ரேடியோ செய்தி ஒன்று கூறுகிறது.

யூகோ. தலைநகரான பெல்கிரேடில், பலாத்கார ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. பிரிட்டிஷ், அமெரிக்க படிப்பகங்களுக்குப் போகிறவர்களையெல்லாம் வழிமறித்து அட்டகாசம் செய்கின்றனர்.

### முன்னர் வந்த செய்தி

லண்டன், அக். 15—

மார்ஷல் டிட்டோவும், இதாலியப் பிரதமர் பீலாவும் சந்தித்து, இதாலி — யூகோவுக் கிடையேயுள்ள தகராறுக்குட்பட்ட பிரதேசங்களைப் பிரிவினை செய்து கொள்வதற்கு வழி கோல, பிரிட்டனும், அமெரிக்காவும் முயன்று வருகின்றன.

### கடமை உணர்ச்சிக்குப் பரிசு

லண்டன், அக். 15—

"பிரின்ஸஸ் விக்டோரியா" என்ற கப்பல் சென்ற ஜன. 31ல், ஐரிஷ் கடலில் புயலுக்கு இரையான போது, கப்பலைவிட்டு அகலாமல், கடைசி நிமிடம் வரை செய்திகள் அனுப்பிக் கொண்டிருந்த ரேடியோ ஆபீசர் கப்பலில் மூழ்கி இறந்தார். இவருடைய கடமை உணர்ச்சியைப் பாராட்டி மிக உயர்ந்த பரிசாகிய 'ஜார்ஜ் கிராஸ்' இவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

### சிந்தனைப் படிப்பகத் துவக்க விழா

கோவை, அக். 12—

10—10—53 மாலை சிந்தனைப் படிப்பகத்தின் துவக்க விழா தோழர் ம. கனகு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் வெற்றிவேந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். புலவர் மருதவாணன் படிப்பகத்தைத் துவக்கி வைத்துப் பேசினார். தோழர்கள் முத்துரத்தினம், அரசு, சி. டி. தண்டபாணி ஆகியோர் படிப்பகத்தின் அவசியத்தைப் பற்றிப் பேசினர்.

சென்னை சௌகார்பேட்டையை 'திரு. வி. க. நகர்' என மாற்றும்படி சென்னை நகர சபையைக் கோரியும், கோவை லாலி ரோட்டில் தண்ணீர் கஷ்டத்தைப் போக்க மேலும் ஒரு லாரி தண்ணீர் விடக் கோரியும், போக்குவரவுக்கு இடையூறாகவும், குறுகலாகவும் உள்ள லாலி ரோடு பாலத்தை விரிவாக்கக் கோரியும், லாலி ரோடு என்னும் பெயரை 'திரு. வி. க. ரோடு' என மாற்றக் கோரியும் நகர சபையைக் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### இரகசியம்—ஆனால்......

பெர்லின், அக். 15—

வெளி மங்கோலியா குடியரசைச் சேர்ந்த ஒரு நகரத்தையே காலி செய்து, அங்கு இரகசிய ஆயுதங்களை ரஷ்யர்கள் தயாரித்து வருவதாகத் தெரிகிறது. ஜெர்மனி, ஜப்பான், ஸ்பெயின் நாட்டு யுத்தக் கைதிகளும், அடிமை மக்களும் புது தொழிற்சாலைகளையும், ஆராய்ச்சி நிலையங்களையும் கட்டி வருகின்றனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை. எம்.ஏ.